# வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் ஐம்பத்தொன்பதாவது பொதுக்கூட்ட வரைபு அறிக்கை

1. கூட்டம் நடைபெற்ற காலம் 16.02.2023 வியாழக்கிழமை மு.ப 9.30 மணி
2. கூட்டத்திற்கு தலைமை தாங்கியவர் கௌரவ தவிசாளர் கருணாகரன் தர்ஷன்
3. கூட்டம் நடைபெற்ற இடம் வலிகாமம் தெற்கு பிரதேசசபை சபா மண்டபம்

**கூட்டத்தில் கலந்துகொண்ட உறுப்பினர் விபரம்**

| | | |
|---|---|---|
| 1 | கௌரவ கருணாகரன் தர்ஷன் | தவிசாளர் |
| 2 | கௌரவ இராசையா பரமேஸ்வரலிங்கம் | உபதவிசாளர் |
| 3 | கௌரவ அன்னதானம் றிச்சாட் தவப்பிரகாசம் | உறுப்பினர் |
| 4 | கௌரவ இரத்தினசிங்கம் அரிகரன் | உறுப்பினர் |
| 5 | கௌரவ செல்வரத்தினம் உதயகுமாரன் | உறுப்பினர் |
| 6 | கௌரவ குணராஜா டெனிஸ்கமல்ராஜ் | உறுப்பினர் |
| 7 | கௌரவ சிவரூபன் லகீந்தன் | உறுப்பினர் |
| 8 | கௌரவ இராசரத்தினம் உசாந் | உறுப்பினர் |
| 9 | கௌரவ கருணைநாதன் அபராசுதன் | உறுப்பினர் |
| 10 | கௌரவ வரதராசா தனகோபி | உறுப்பினர் |
| 11 | கௌரவ பாலசிங்கம் சுரேஸ்குமார் | உறுப்பினர் |
| 12 | கௌரவ ரவிக்குமார் யோகாதேவி | உறுப்பினர் |
| 13 | கௌரவ தவராசா துவாரகன் | உறுப்பினர் |
| 14 | கௌரவ தேவராஜா திருமுருகராஜன் | உறுப்பினர் |
| 15 | கௌரவ இரத்தினசிங்கம் கெங்காதரன் | உறுப்பினர் |
| 16 | கௌரவ திருச்செல்வம் அன்ரன் லீனஸ் | உறுப்பினர் |
| 17 | கௌரவ சந்திரவதனி காந்தராசா | உறுப்பினர் |
| 18 | கௌரவ துஸ்யந்தினி அருள்பரன் | உறுப்பினர் |
| 19 | கௌரவ அருணாசலம் சந்திரன் | உறுப்பினர் |
| 20 | கௌரவ செல்வராசா காஜத்திரி | உறுப்பினர் |
| 21 | கௌரவ சசிக்குமார் சியாமளா | உறுப்பினர் |
| 22 | கௌரவ சாகிதா கணேசநாதன் | உறுப்பினர் |
| 23 | கௌரவ செல்வராசா கஜேந்திரா | உறுப்பினர் |
| 24 | கௌரவ செல்லப்பா விஜயானந்தன் | உறுப்பினர் |
| 25 | கௌரவ ரவீந்திரன் ரதீஸ்வரன் | உறுப்பினர் |
| 26 | கௌரவ சிவபாதம் சிவசங்கர் | உறுப்பினர் |
| 27 | கௌரவ இராசகுலம் லலிதாவதி | உறுப்பினர் |
| 28 | கௌரவ லோகநாதன் கோகிலன் | உறுப்பினர் |

**கூட்டத்திற்குச் சமூகமளிக்காதோர் விபரம்**

1.கௌரவ ஜெயராஜா தனுஜா உறுப்பினர்

கௌரவ தவிசாளரினால் அனைவருக்கும் வணக்கம் தெரிவித்து ஒரு நிமிட அகவணக்கத்துடன் கூட்டம் ஆரம்பமானது. கௌரவ தவிசாளர் தனது தலைமை உரையில் தனது அழைப்பை ஏற்று இக்கூட்டத்திற்கு வருகை தந்த கௌரவ உப தவிசாளர், கௌரவ உறுப்பினர்கள் செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவரையும் அன்போடு வரவேற்று நன்றியினையும் தெரிவித்தார்.

மேலும் நிகழ்ச்சி நிரலுக்கமைவாக கடந்த **18.01.2023** ஆம் திகதிய கூட்ட அறிக்கையினை சபையில் சமர்ப்பித்து அங்கீகாரத்தினைக் கோரினார். இதில் ஏதாவது மாற்றங்கள் அல்லது திருத்தங்கள் இருப்பின் தெரிவிக்குமாறும் குறிப்பிட்டார்.

## கடந்த 18.01.2023 கூட்ட அறிக்கை திருத்தம்

**கௌரவ உறுப்பினர் குணராஜா டெனிஸ்கமல்ராஜ் அவர்கள் தெரிவிக்கையில் பக்கம் - 10 தீர்மானம் 704 இல் எத்தனை முன்பள்ளிகள் எனப்போடவேண்டும் எனத் தெரிவித்தார். அத்துடன் ஒரு ஆசிரியருக்கு 5000 ரூபா வீதம் FD போடவேண்டும். ஏவ்வளவு தொகை என்பதையும் 3.1 Mn தற்போது 4 Mn எனப் போடவேண்டும். மேலும் நான் முன்பள்ளி தொடர்பாக கதைத்த விடயம் முழுமையாக வரவேண்டும். ஏகமனதாக சபையில் போடவேண்டும். அத்துடன் அதை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.**

**கௌரவ உறுப்பினர் செல்வரத்தினம் உதயகுமாரன் அவர்கள் பக்கம் -7 இல் தீர்மானம் 698 இன் தீர்மானத்திற்கு கீழ் தொடர்பில்லாமல் பந்தி உள்ளது. அதனை மாற்றவேண்டும். நான் நிதி உதவி கிடைத்தது தொடர்பாகக் கதைத்தது வேறு இடத்தில் வரவேண்டும்.**

கௌரவ உறுப்பினர் குணராஜா டெனிஸ்கமல்ராஜ் அவர்கள் சென்ற கூட்டத்திற்கு முந்திய கூட்டத்திருத்தத்தில் எமது பிரதேச சபைக்குட்பட்ட முன்பள்ளிகளுக்கு மாதாந்தக் கொடுப்பனவாக ஆசிரியர் ஒருவருக்கு ரூபா 5000 ரூபா FD யில் இருந்து கிடைக்கக் கூடிய வருமானத்திலிருந்து வழங்கக் கூடியவாறு நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதையும் எத்தனை முன்பள்ளிகள் இருக்கின்றது என்பதைக் கணக்கெடுத்து அதன்படி கொடுக்க வேண்டும் அதனை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது என்பது தவறவிடப்பட்டுள்ளது.

அத்துடன் குழந்தைப்பிள்ளைகள் திருத்தியிருப்பதுபோல இருக்கிறது. ஏதோ நான் கேட்டபடியால் திருத்தியதுபோல் உள்ளது என்றும் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் செல்வரத்தினம் உதயகுமாரன் அவர்கள் சென்ற கூட்ட அறிக்கையில் முன்பள்ளி தொடர்பான விடயம் திருத்தப்படவேண்டும். எவ்வளவு முதல் போட்டு ரூபா 5000 கிடைக்க வேண்டும் என்பதையும் முன்பள்ளி தொடர்பாகக் கதைத்தது முழுமையாகப் போடப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது என்பது வரவேண்டும் அத்துடன் சபையின் கீழ் இயங்கும் எத்தனை முன்பள்ளிகள் என்று குறிப்பிட வேண்டும்.

**தீர்மானம் - 730 /16.02.2023**

**18.01.2023 ஆம் திகதிய பொதுக்கூட்ட அறிக்கையினை திருத்தங்களுடன் அங்கீகரிப்பதென சபையால் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**முன்மொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் அருணாசலம் சந்திரன்**

**வழிமொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் இரத்தினசிங்கம் கெங்காதரன்**

தீர்மானம் - 731 /**16.02.2023**

ஜனவரி மாதத்திற்கான கொடுப்பனவு அறிக்கை கௌரவ தவிசாளரினால் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் கோரப்பட்டது.

முன்மொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் இராசையா பரமேஸ்வரலிங்கம்

வழிமொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் வரதராசா தனகோபி

குழுக்களின் அறிக்கை என்ற வகையில் நிதிக்குழு அறிக்கை சபையில் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் கோரப்பட்டது.

தீர்மானம் - 732 /**16.02.2023 -** நிதிக்குழு அறிக்கை

நிதிக்குழு – 24.01.2023

1. சபை நிதியில் மேற்கொள்ளப்பட்ட ஏழமலை உப அலுவலகப்பொறுப்பதிகாரியின் கோரிக்கைக்கமைய மயிலங்காடு சந்தைக்கு கிரவல் மண் பறித்தமைக்கான கொடுப்பனவு ரூபா. 2,075,500.00 ஐ **Banusha Transport** நிறுவனத்திற்கு வழங்கச் சிபார்சு செய்யப்படுகிறது.
2. சபை நிதியில் மேற்கொள்ளப்பட்ட சந்திரான் உப ஒழுங்கை, செட்டிதோட்டம் 2 ம் ஒழுங்கை மற்றும் துரையன் தோட்டம் உப ஒழுங்கை ஆகிய வீதிகளின் வீதித்திருத்த வேலைக்கான இறுதிக் கொடுப்பனவு ரூபா. 1,535,400.00 இதில் இதில் **VAT 15%** ரூபா 230,310.00 மொத்தம் ரூபா 1,765,710.00 இதில் 5% பிடிபணம் ரூபா.210,550.00 தவிர மிகுதி ரூபா 2,834,807.50 ஐ ஒப்பந்த நிறுவனமான **AVP Construction (PVT) Ltd** நிறுவனத்திற்கு வழங்கச் சிபார்சு செய்யப்படுகிறது.
3. சபை நிதியில் மேற்கொள்ளப்பட்ட யஸ்ரின் சின்னப்பு வீதி, உதய சூரியன் 4 ம் குறுக்கு வீதி, ஆகிய வீதித்திருத்த வேலைக்கான இறுதிக் கொடுப்பனவு ரூபா1,362,328.00 இதில் 5% பிடிபணம் ரூபா.68,116.40 தவிர மிகுதி ரூபா 1,294,211.60 ஐ ஒப்பந்த நிறுவனமான **Mahan Enterprises Construction & Engineering** நிறுவனத்திற்கு வழங்கச் சிபார்சு செய்யப்படுகிறது.
4. பிரதேச அபிவிருத்தி உதவித்திட்ட நிதியின் கீழ் **Being Final payment of Construction of Ramp for Disable people at Chunnakam Libruary** ரூபா 150,336.50 தவிர மிகுதி ரூபா 141,756.50 ஐ சுன்னாகம் வடக்கு சனசமூக நிலையத்திற்கு சபை நிதியில் முற்பணமாக வழங்கவும் பிரதேச அபிவிருத்தி உதவித்திட்ட நிதி கிடைத்தவுடன் சீர் செய்யவும் குழு சிபார்சு செய்யப்படுகிறது.

நிதிக்குழு – 01.02.2023

1. பிரதேச அபிவிருத்தி உதவித்திட்ட நிதியின் கீழ் மயிலங்காடு மரக்கறி மற்றும் மீன் சந்தை அமைத்தல் வேலைக்குரிய இறுதிக் கொடுப்பனவு ரூபா 1,747,364.40 இதில் **VAT 15%** ரூபா 262,104.66 மொத்தம் ரூபா 2,000,469.06 இதில் முற்பணக்கொடுப்பனவு ரூபா 1,460,650.90 தவிர்ந்த மிகுதிக் கொடுப்பனவு ரூபா 3,192,726.95 ஐ ஒப்பந்த நிறுவனமான **Sarukaya Construction (PVT) Ltd** நிறுவனத்திற்கு சபை நிதியில் வழங்கவும் குழு சிபார்சு செய்யப்படுகிறது.

நிதிக்குழு – 07.02.2023

1. வருமானப் பரிசோதகரின் அறிக்கைப் பிரகாரம் நாளாந்தம் வாகனத்தரிபிடக் கட்டணமாக சராசரியாக ரூபா 25,000.00 ஐ ரூபா 35,000.00 வரை அறவிடப்படுகிறது எனவும் இதனால் மருதனார்மடம் சந்தை 2022 ம் ஆண்டு குத்தகை எடுத்த திரு.சிவபாதசுந்தரம் கோரிக்கைக்கமைவாக 21.04.2022- 09.05.2022, ம் திகதி மற்றும் **12.05.**.2022 -19.05.2022, 20.10.2022 வரையான காலப்பகுதிக்கான வருமான இழப்பிற்கான விலக்கழிப்பு சிபார்சு செய்யப்படுகின்றது.

2. எமது சபை நிதியில் மேற்கொள்ளப்பட்ட சங்க வேலி பொது நோக்கு மண்டபத்திற்கு **Gate** அமைத்த வகையால் இறுதிக் கொடுப்பனவு ரூபா. 438,685.48 ஐ இதில் 5% பிடிபணம் ரூபா.24,980.50 தவிர மிகுதி ரூபா 413,704.98 ஐ ஒப்பந்த நிறுவனமான அருள் விநாயகர் சனசமூக நிலையத்திற்கு வழங்கச் சிபார்சு செய்யப்படுகிறது.

நிதிக்குழு – 08.02.2023

1. உள்ளூர் அபிவிருத்தி உதவித்திட்ட நிதியின் கீழ் புனரமைக்கப்பட்ட மருதனார்மடம் சந்தை மதில் அமைத்தலுக்கான கொடுப்பனவு **2.5 %** பிடிபணம் உட்பட ரூபா. 1,400,005.91 இதில் 5% பிடிபணம் ரூபா.84,541.06 தவிர மிகுதி ரூபா 1,315,510.85 ஐ ஒப்பந்த நிறுவனமான அறிவாலயம் சனசமூக நிலையத்திற்கு சபை நிதியில் வழங்கவும் **LDSP** நிதி கிடைத்தவுடன் சீர் செய்யவும் குழு சிபார்சு செய்யப்படுகிறது.

நிதிக்குழு – 15.02.2023

1. ஜனவரி மாதத்திற்குரிய கொடுப்பனவு அறிக்கை சிபார்சு செய்யப்படுகின்றது.

மேற்படி கொடுப்பனவுகளை சபையால் அங்கீகரிப்பதென ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

முன்மொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் செல்வராசா காஜத்திரி

வழிமொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் கருணைநாதன் அபராசுதன்

**தீர்மானம் - 733 / 16.02.2023**

**சபையின் 2022.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானச்செலவுக்கணக்கு , ஐந்தொகை பரீட்சைமீதி , காசுப்பாய்ச்சல் கூற்று , நாட்குறிப்பு ஆகிய இறுதிக்கணக்குகளிற்கான அனுமதியினை வழங்குவதென சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**முன்மொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் செல்வரத்தினம் உதயகுமார்**

**வழிமொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் ரவிக்குமார் யோகாதேவி**

கௌரவ உறுப்பினர் சிவரூபன் லகீந்தன் அவர்கள் வட்டாரக் கோரிக்கை வந்து மக்கள் போட்டார்கள். நான் எனது வட்டாரத்தில் மக்கள் போட்ட வீதி தொடர்பான முழுக் கோரிக்கையும் போடப்பட்டுள்ளது.

கௌரவ உறுப்பினர் செல்வரத்தினம் உதயகுமார் அவர்கள் படவரைஞர் தொடர்பாக NVQ Level-05 தொடர்பாக Circular வந்துள்ளதா? குறைந்தளவு படவரைஞர் தான் இருப்பின், ஏற்கனவே பதியப்பட்டவர்களை எடுக்கமுடியாதா என்றும் வினாவினார்.

கௌரவ உறுப்பினர் பாலசிங்கம் சுரேஸ்குமார் அவர்கள் ஐயனார் சனசமூக நிலையத்தில் விசேட கூட்டம் ஒன்று நடைபெற்றது. அதில் புலம்பெயர் நிதி எடுத்து 03 எழுதிக்கொண்டு வந்தது. CDO விற்கு அறிவிக்கப்பட்டது. ஆயினும், CDO மூலம்தான் வரவேண்டும் என்று தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் தவராசா துவாரகன் அவர்கள் வீதி விளக்குகளைத்திருத்துவதற்கான கோரிக்கை ஒன்றினையும் முன்வைத்தார்.

மலசலகூட கழிவுகள் கொட்டில் உள்ள ஆதாரம் ஊருக்குள்ள மயிலணி வீட்டுக்குள்ள போடப்பட்டிருக்கிறது. சபை அனுமதி இல்லை. கேற் போடப்பட்டீருக்கு.

கௌரவ தவிசாளர் அவர்கள் நிர்வாகத்திடம் கேட்க வேண்டும். இவர்கள் சம்மதிக்காமல் போடக்கூடாது. பொதுப்பாதை ஆகையால் அகற்றவேண்டும். மயிலணி வடக்கில் இரும்பு கேற் போடப்பட்டுள்ளது.

கௌரவ உப தவிசாளர் அவர்கள் பொதுப்பாதையாக இருந்தால் பிரதேசசபை 3 பேர் சம்மதக் கடிதம் தெரிவிக்க வேண்டும் அத்துடன் இதனை ஞாபகப்படுத்த வேண்டும்.

**தீர்மானம் 734 /16.02.2023**

**பெறுகைக்குழு உறுப்பினர்கள்**

1. **கௌரவ தவிசாளர் கருணாகரன் தர்ஷன் (தலைவர்)**
2. **கௌரவ பாலசிங்கம் சுரேஸ்குமார்**
3. **கௌரவ ரவிக்குமார் யோகாதேவி**
4. **கௌரவ ஜெயராஜா தனுஜா**
5. **கௌரவ செல்வரத்தினம் உதயகுமாரன்**

6. கௌரவ இரத்தினசிங்கம் அரிகரன்
7. கௌரவ கருணைநாதன் அபராசுதன்
8. செயலாளர்
9. சிரேஸ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் ந.சஞ்சீவ்

முன்மொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் செல்வரத்தினம் உதயகுமாரன்

வழிமொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் அன்னதானம் றிச்சாட் தவப்பிரகாசம்

**தீர்மானம் 735 /16.02.2023**

சட்ட ஆலோசனை தொடர்பாக சட்ட ஆலாசகரால் கோரப்பட்ட பின்வரும் புதிய கட்டண விபரத்தை அனுமதிப்பது என சபையால் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

| இல | வழக்கு விபரம் | கட்டண விபரம் |
|---|---|---|
| 1 | மேல் நீதிமன்றம் / மேன்முறையீட்டு நீதிமன்றில் சார்பாக எழுத்தானை வழக்குத் தொடுத்தல் | 25,000.00 |
| 2 | மாவட்ட நீதிமன்றில் / நீதிவான் நீதிமன்றில் சபை சார்பாக வழக்குத்தொடுத்தல் | 15,000.00 |
| 3 | சபை சார்பாக மேல் நீதிமன்றில் / மேன் முறையீட்டு நீதிமன்றில் வழக்கு விசாரணைக்கு நீதிமன்றில் தோன்றுதல் (தவணை ஒன்றிற்கான கட்டணம்) | 5,000.00 |
| 4 | மாவட்ட நீதிமன்றில் / நீதிவான் நீதிமன்றில் சபை சார்பாக வழக்கு விசாரணைக்கு நீதிமன்றில் தோன்றுதல் (தவணை ஒன்றிற்கான கட்டணம்) | 4,000.00 |
| 5 | கட்டட விண்ணப்பங்கள் , பெயர் மாற்றங்கள் மற்றும் சட்டரீதியான பிணக்குகள்தொடர்பாக சட்ட ஆலோசனை எழுத்து மூலம் வழங்கல் ( கோவை ஒன்றிற்கான கட்டணம்) | 3,000.00 |

முன்மொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் சந்திரவதனி காந்தராசா

வழிமொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் இரத்தினசிங்கம் கெங்காதரன்

**தீர்மானம் 736/16.02.2023 – விடுமுறை**

16.02.2023 ஆம் திகதி அன்று சுகயீனம் காரணமாக கூட்டத்திற்கு சமூகமளிக்காத கௌரவ உறுப்பினர் ஜெயராஜா தனுஜா அவர்களின் சுகயீன விடுமுறையினை அனுமதிப்பது என சபையால் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

முன்மொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் சந்திரவதனி காந்தராசா

வழிமொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் இரத்தினசிங்கம் கெங்காதரன்

கௌரவ உறுப்பினர் செல்வரத்தினம் உதயகுமாரன் அவர்கள் புதிதாக படவரைஞர் பதிவு செய்தல் தொடர்பாக NVQ Level- 05 பயிற்சி நெறி பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என்ற நிபந்தனையால் எமது பிரதேச சபைக்குட்பட்ட படவரைஞர்களுக்கான சந்தர்ப்பம் குறைகின்றது. பழையவர்களுக்குச் சந்தர்ப்பம் இல்லாமல் போகின்றது. இதற்கான தீர்வுதான் என்ன என்று வினாவெழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த கௌரவ தவிசாளர் அவர்கள் Drafting technology என்றபுதிய கற்கை நெறியில் பதிவு செய்தால் போதுமானது. இருந்தபோதிலும், பழைய படவரைஞர்களுக்கான சந்தர்ப்பம் வழங்க நகர அபிவிருத்தி அதிகாரசபையிடம் கலந்துரையாடுவது எனத் தெரிவித்தார்.

கௌரவ செல்வராசா கஜேந்திரா அவர்கள் மயிலணி வடக்குப்பகுதியில் கம்பெரெலியா நிதியில் மேற்கொள்ளப்பட்ட வீதியொன்றுக்கு Gate போட்டு வீதியை பாவிக்க முடியாமல் தடை செய்துள்ளார்கள். எனவே, பொதுமக்களின் நன்மைகருதி Gate அகற்ற சபையால் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக்கேட்டுக்கொண்டார்.

**தீர்மானம் 738/16.02.2023**

**2022ம் ஆண்டு அபிவிருத்தி ஒதுக்கத்தில் உள்ள ரூபா 31.6 மில்லியனில் வட்டாரத்திற்கு 1.7 மில்லியன் என்ற அடிப்படையில் முன்மொழியப்பட்ட பின்வரும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு மதிப்பீடு செய்து பத்திரிகையில் கேள்வி கோரி வேலை மேற்கொள்ள சபையால் ஏகமனதாக தீர்மானிக்கப்படுகிறது.**

1. வட்டாரம் 01 சைவமகாஜனா குறுக்குவீதி, சிவகுரு கடை வீதி (J/210m)
2. வட்டாரம் 02 ஏழாலை வாசியசாலை வீதி கிளை வீதி, இலங்கையர்கோன் குறுக்கு வீதி, அன்னமார் கோயில் குறுக்கு வீதி
3. வட்டாரம் 03 சூராவத்தை முத்துமாரி அம்மன் வெள்ளவாய்க்கால் இணைப்பு விதி (J/203)
4. வட்டாரம் 04 குப்பிளான் சந்திக்கு அருகாமையில் உள்ள கிளை வீதிகள் குப்பிளான் மயிலங்காடு பிரதான வீதியின் குறுக்கு வீதி,
5. வட்டாரம் 05 இலந்தையடி வீதி (மத்தாளோடை)(J/208)
6. வட்டாரம் 06 மயிலங்காடு ஒன்றிய ஒழுங்கை, பிரதான கொலனி வீதி 3ம்,4ம் கிளை வீதிகள்,
7. வட்டாரம் 07 அன்னமார் கோவில் வீதி
8. வட்டாரம் 08 தம்பிமுத்து உபாத்தியாயர் 5ம் குறுக்கு வீதி (J/199)
9. வட்டாரம் 09 புளியடி வீதி 1ம் குறுக்கு வீதி (J/186)
10. வட்டாரம் 10 சங்குவேலி பிள்ளையார் 2ம் குறுக்கு வீதி
11. வட்டாரம் 11 நாகம்மாள் 2ம் கிளை ஒழுங்கை
12. வட்டாரம் 12 கதிரமலை 3ம்,4ம் ஒழுங்கை
13. வட்டாரம் 13 பூவோடை மயான கிளை வீதி
14. வட்டாரம் 14 பட்டியோலை குறுக்கு வீதி 2 (J/182)
15. வட்டாரம் 15 கற்பகப்பிள்ளையார் கோயில் வீதி (J/183)
16. வட்டாரம் 16 செட்டிவளவு உப வீதி (J/191)
17. வட்டாரம் 17 தாவடி, காளி கோயில் வீதி
18. வட்டாரம் 18 பாவட்டம் ஒழுங்கை
19. மல்வம் 2ம் கிளை வீதி
20. வில்வக்குடையான் 6ம் குறுக்கு வீதி
21. வில்வக்குடையான் 3ம் குறுக்கு வீதி
22. பிரதேச செயலக குறுக்கு வீதி மிகுதி வேலை
23. நாகம்மாள் வீதி கட்டம் **II J/ 186**
24. ஆறுமுகம் 1ம் குறுக்கு வீதி **J/199**
25. கினாமரம் 4ம் குறுக்கு வீதி **J/ 198**
26. சுலக்சன் வீதி **J/199**
27. ஆசாரி வீதி உப ஒழுங்கை
28. பத்தானை வீதி

முன்மொழிந்தவர் : கௌரவ உறுப்பினர் பாலசிங்கம் சுரேஸ்குமார்

வழிமொழிந்தவர் : கௌரவ உறுப்பினர் வரதராசா தனகோபி

**தீர்மானம் 739/16.02.2023**

| வீதிகள் | | | |
|---|---|---|---|
| **1** | சைவமகாஜனா குறுக்குவீதி, சிவகுரு கடை வீதி (J/210m) | **1,350,000.00** | **31.6 MN** |
| **2** | ஏழாலை வாசியசாலை வீதி கிளை வீதி, | **800,000.00** | **31.6 MN** |
| **3** | சூராவத்தை முத்துமாரி அம்மன் வெள்ளவாய்க்கால் இணைப்பு விதி **(J/203),,yq;ifah;Nfhd; FWf;F tPjp>** | **1,700,000.00** | **31.6 MN** |
| **4** | குப்பிளான் சந்திக்கு அருகாமையில் உள்ள கிளை வீதி | **750,000.00** | **31.6 MN** |
| **5** | குப்பிளான் மயிலங்காடு பிரதான வீதியின் குறுக்கு வீதி, | **1,350,000.00** | **31.6 MN** |
| **6** | இலந்தையடி வீதி (மத்தாளோடை)(J/208)**kapyq;fhL xd;wpa xOq;if>** | **1,700,000.00** | **31.6 MN** |
| **7** | பிரதான கொலனி வீதி 3ம்,4ம் கிளை வீதிகள், | **1,075,000.00** | **31.6 MN** |
| **8** | அன்னமார் கோவில் வீதி | **1,282,825.00** | **31.6 MN** |
| **9** | தம்பிமுத்து உபாத்தியாயர் 5ம் குறுக்கு வீதி (J/199) | **405,950.00** | **31.6 MN** |
| **10** | புளியடி வீதி 1ம் குறுக்கு வீதி (J/186) | **1,699,930.00** | **31.6 MN** |
| **11** | சங்குவேலி பிள்ளையார் 2ம் குறுக்கு வீதி | **1,580,000.00** | **31.6 MN** |
| **12** | கதிரமலை 3ம்,4ம் ஒழுங்கை | **1,542,725.00** | **31.6 MN** |
| **13** | பூவோடை மயான கிளை வீதி | **1,700,000.00** | **31.6 MN** |
| **14** | பட்டியோலை குறுக்கு வீதி 2 (J/182) | **1,700,000.00** | **31.6 MN** |
| **15** | கற்பகப்பிள்ளையார் கோயில் வீதி (J/183) | | **31.6 MN** |
| **16** | செட்டிவளவு உப வீதி (J/191) | **1,430,000.00** | **31.6 MN** |
| **17** | மல்வம் 2ம் கிளை வீதி | **450,000.00** | **31.6 MN** |
| **18** | வில்வக்குடையான் 6ம் குறுக்கு வீதி | **618,000.00** | **31.6 MN** |
| **19** | வில்வக்குடையான் 3ம் குறுக்கு வீதி | **564,000.00** | **31.6 MN** |
| **20** | பிரதேச செயலக குறுக்கு வீதி மிகுதி வேலை | **493,350.00** | **31.6 MN** |
| **21** | நாகம்மாள் வீதி கட்டம் **II J/ 186** | **1,204,050.00** | **31.6 MN** |

| | | | |
|---|---|---|---|
| 22 | ஆறுமுகம் 1ம் குறுக்கு வீதி **J/199** | **379,500.00** | **31.6 MN** |
| 23 | கினாமரம் 4ம் குறுக்கு வீதி **J/ 198** | **422,050.00** | **31.6 MN** |
| 24 | சுலக்சன் வீதி **J/199** | **303,600.00** | **31.6 MN** |
| 25 | ஆசாரி வீதி உப ஒழுங்கை | **1,700,000.00** | **31.6 MN** |
| 26 | பத்தானை வீதி கட்டம் **II** | **1,700,000.00** | **31.6 MN** |
| 27 | **Malvam Market** | **375,000.00** | |
| 28 | **Access path at Maruthanarmadam Public Market** | **2,195,000.00** | |
| **Total** | | **30,470,980.00** | |

**முன்மொழிந்தவர் : கௌரவ உறுப்பினர் சசிக்குமார் சியாமளா**

**வழிமொழிந்தவர் : கௌரவ உறுப்பினா பாலசிங்கம் சுரேஸ்குமார்**

மேற்படி கருத்துக்கள் தீர்மானங்களுடன் கூட்டம் மு.ப 11.00 மணிக்கு கௌரவ தவிசாளர் அவர்களின் நன்றியுரையுடன் நிறைவு பெற்றது.

செயலாளர்

வலிகாமம் தெற்கு பிரதேசசபை